களில் நேரடி தொழில் நிலையின் மொத்த எண்ணிக்கை 1983 இன் 26,055 ஆட்களுடன் ஒப்பிடுகையில் 1984 இறுதியில் 29,251 ஆட்களாக விளங்கியது.

1984 இல் கிராமிய வேளாண்மை துறையில் சார்புரீதியில் முன்னேற்றமான செயலாற்றம் காணப்பட்டமை இத்துறையில் அதிகரித்த தொழில் வாய்ப்பினை அல்லது கீழுழைப்பில் வீழ்ச்சியினைக் காட்டியது.

**விலைகள்**

1984 இல் சில்லறை விலை அசைவுகளின் முக்கிய பண்பு ஆண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பினைத் தொடர்ந்து பின்னரைப் பகுதியில் குறிப்பிடத்தக்க மெச்சத்தக்க வீழ்ச்சியைக் கொண்டிருந்தமையாகும். ஆண்டின் பிற்பகுதியிற் காணப்பட்ட விலைகளின் வீழ்ச்சி 1983 இன் இதே காலப்பகுதியில் அவதானித்த விலைப்போக்கிற்குக் குறிப்பிடத்தக்களவில் மாறுபட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1983 இன் 14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 17 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தபோதிலும் 1984 திசெம்பர் இறுதியில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 9 சதவீதமாக மட்டும் காணப்பட்டது. 1983 இன் 21 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது ஒரு மிதமான அதிகரிப்பாகும். இதேபோல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 25 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 26 சதவீதத்தால் அதிகரித்தபோதிலும் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் அதிகரிப்பு 1984 திசெம்பரில் 5 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரிப்புக்கான முக்கிய காரணி உணவுக்கான துணைச் சுட்டெண் 18.1 சதவீதத்தால் (61.9 சதவீத அளவு) அதிகரித்தமையேயாகும். எரிபொருளும் வெளிச்சமும், உடை, பல்வகை விடயங்கள் போன்ற ஏனைய துணைச் சுட்டெண்களின் அதிகரிப்புக்கள் முன்னைய ஆண்டின் 33.2 சதவீதம், 6.3 சதவீதம், 15.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முறையே 17.9 சதவீதம், 5.6 சதவீதம், 14.6 சதவீதமாக விளங்கின.


பாதகமான வானிலைநிலைமைகள், நிருவாக விலைத் திருத்தங்கள், உள்நாட்டுச் சந்தை மீதான உயர் ஏற்றுமதி விலைகளின் தாக்கம் ஆகியன 1984 இன் முற்பகுதியில் உணவு விலைகளின் கடுமையான அதிகரிப்புக்குப் பங்களித்த காரணிகளாகும். சனவரியில் அரிசி, கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. உயர் மழைவீழ்ச்சியினால் ஏற்பட்ட பயிர் அழிவு அரிசி, காய்கறி, மற்றும் மிளகாய், சின்ன வெங்காயம் போன்ற ஏனைய உணவு விடயங்களின் திறந்த சந்தை விலைகள் ஆண்டின் முதலரைப் பகுதியில் அதிகரிப்பை ஏற்படுத்தின. 1983 இன் இறுதிப் பகுதியில் அதிகளவில் உயர்வடைந்த தெங்குப் பொருட்களின் விலைகள் 1984 இன் முதல் காலாண்டில் தொடர்ந்தும் உயர்வடைந்தன. ஆண்டின் முதலரைப் பகுதியில் தேங்காய் எண்ணெய் விலைகளும் உயர் மட்டத்தில் இருந்தன.

தெங்கு, தேங்காயெண்ணெய், காய்கறிகள் போன்ற சில முக்கிய பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தமை 1984 இன் இரண்டாம் காலாண்டில் காணத்தக்க பண்பாக இருந்தது. சுட்டெண்ணின் மாதாந்த அதிகரிப்பு வீதம் பெப்புருவரியில் இருந்து செத்தெம்பர் வரை படிப்படியாக வீழ்ச்சியுற்று 1977 செத்தெம்பரின் பின்பு முதன் முதலாக இவ்வாண்டு செத்தெம்பரில் வீழ்ச்சியைப்

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1974=100

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

பதிவு செய்தது. வழமையான ஆண்டு முடிவு அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் கடைசிக் காலாண்டின் அதிகரிப்புக்கள் சார்புரீதியில் குறைந்தளவான தாக விளங்கின.

முக்கியமாக ஆண்டின் முதல் காலாண்டில் தெங்கு உற்பத்திகளுக்கும் தேயிலைக்கும் நிலவிய உயர் ஏற்றுமதி விலைகளின் விளைவால் 1983 இன் 43.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ஏற்றுமதி விலைகள் 61.9 சதவீதத்தால் உயர்வடைந்தன. உள்நாட்டு விடயங்களின் விலைகள் 1983 இன் 12.8 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 15.7 சதவீதத்தால் உயர்வடைந்த வேளையில் இறக்கு மதித் தொகுதியின் விலைகள் முன்னைய ஆண்டின் 9.5 சதவீதத்துடன் ஒப்பிடுகை யில் 10.4 சதவீதத்தால் அதிகரித்தன.

முதல் காலாண்டில் அதன் உச்சத்தில் விளங்கிய மொத்த விற்பனவு விலைச் சுட்டெண் 1984 மேயிலிருந்து ஒகத்து காலப் பகுதியில் வீழ்ச்சியடையும் போக் கினைக் காட்டியது. செத்தெம்பரில் விலைகள் உறுதியாக்கப்பட்டபோதும் நான்காம் காலாண்டு விலைமட்டம் முதலாம் காலாண்டின் மட்டங்களைவிட குறைவான தாகக் காணப்பட்டது.

குறிப்பிட்ட சில ஏற்றுமதி விடயங்களுக்கு சார்புரீதியில் உயர்ந்த அளவுகள் வழங்கப்பட்டதன் காரணமாக தேயிலை, தெங்கு ஏற்றுமதி விலைகள் 1984 இல் சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தன. ஏற்றுமதித் துறைக்கான துணைச் சுட்டெண் 51.2 சதவீதத்தால் அதிகரித்தாலும் இது முன்னைய ஆண்டின் அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவானதாகும். தெங்குப் பொருட்களின் உயர்ந்த விலைகள் முதல் காலாண்டில் இவ்வதிகரிப்புக்கு உதவி யளித்தவேளையில் அடுத்த மூன்று காலாண்டிலும் காணப்பட்ட குறைந்த விலை களினால் ஏற்றுமதி துணைச் சுட்டெண் 1984 திசெம்பரில் புள்ளிக்குப் புள்ளி என்ற அடிப்படையில் அதிகரிப்பாக 2.2 சதவீதத்தை மாத்திரமே கொண்டிருந் தது.

உள்நாட்டுத் துறைக்கான துணைச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 11.3 சதவீதத்தால் உயர்வடைந்தது. திறந்த சந்தை நெல், செத்தல் மிளகாய், காய்கறிகள், சின்ன வெங்காயம் போன்றவற்றின் விலைகளின் அதிகரிப்புக்கள் சுட்டெண்ணில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்புக்குப் பங்களித்தன. இதற்கு மாறாக இறக்குமதித் தொகுதிக்கான துணைச் சுட்டெண் 1983 இன் 10.2 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 1984 இல் 6.3 சதவீத குறைந்த அதிகரிப்பைப் பதிவு செய்தது.

பண்ட ரீதியில் உணவுக்கான துணைச் சுட்டெண் மொத்தச் சுட்டெண்ணை ஒத்த போக்கைக் காட்டியது. முன்னைய ஆண்டினைவிட உணவுக்கான துணைச் சுட்டெண்ணின் சராசரி அதிகரிப்பு 33 சதவீதமாக விளங்கிய வேளையில் திசெம் பரில் புள்ளிக்குப் புள்ளி என்ற அடிப்படையிலான அதிகரிப்பு 4.7 சதவீதம் மாத்திரமாகவிருந்தது.

பெற்றோலிய உற்பத்திகளுக்கான துணைச் சுட்டெண் 1983 இன் சராசரி விலையுடன் ஒப்பிடும்பொழுது 12.5 சதவீதத்தால் அதிகரித்தபோதும் இவ்வாண் டில் பெற்றோலிய விலைகளில் மாற்றமின்மையால் இத்துணைச் சுட்டெண் மாற்ற மின்றிக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1984 இல் பல்வகை விடயங்களில் குறைந்த விலை அதிகரிப்பும், உலோக, உலோகமல்லா உற்பத்திகளில் உயர்ந்த விலை அதிகரிப்புக்களும் காணப்பட்டன.